# 2024 தவக்கால  கருப்பொருள்

## ‘திருஅவை மனித சகோதரத்துவத்தைக் கொண்டாடுகிறது’

இந்த கருப்பொருளானது பெப்ரவரி 2024 இன் தீபகற்ப மலேசியாவின் மேய்ப்புப்பணி குழுவின் கருப்பொருள் மற்றும் ஒருங்கிணைந்த பயணம் ( ஆகஸ்ட் 23  - ஜூலை 24) லிருந்து வருகிறது. கலாசார , மத இன பாகுபாடுகளை பொருட்படுத்தாமல் அனைத்து மக்களிடையே ஒற்றுமை , ஒருங்கிணைப்பு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கோடிட்டு காட்டுகிறது

இந்த கருப்பொருளானது பல்வேறு பின்னணியிலிருந்து வரும் மக்களிடையே நல்லிணக்கம் , சமாதானம் மற்றும் கூட்டுஉழைப்பின் கொள்கைகளை பிரதிபலிக்கிறது .

Synod 2021 2024

For a synodal Church

communion | participation | mission

Lent

AOHD



**பொது நலம்** திருஅவைக்கு உட்பட்டும் அப்பாற்பட்டும் மனித சகோதரத்துவத்தின் உறவு பிணைப்பை புதுப்பித்தலும் வலுப்படுத்ததலும் பல்வேறு வகையான மத மற்றும் நெறிமுறை பாரம்பரியங்களில் காணப்படும் அன்பு , இரக்கம் மற்றும் புரிதலின் போதனைகளிலிருந்து உத்வேகம் பெறுகிறது . இது கலந்துரையாடல் , ஒத்துழைப்பு மற்றும் பொது நலனுக்காக ஒன்று சேர்ந்து செயல்படுத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு உறவுணர்வையும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உணர்வையும் வளர்க்கிறது

**ஒருங்கிணைந்த மனித மேம்பாடு** : திருஅவை இந்த தவக்கால கருப்பொருளின் மூலம் ஒவ்வொரு தனி மனித கண்ணியத்தையும் நிலைநிறுத்தும் நெறிகளை ஊக்குவிப்பதையும் ஆதரிப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது . இந்த முழுமைவாய்ந்த கருப்பொருளானது பல்வேறு கலாச்சாரங்களும் பாரம்பரியங்களும் நல்லிணக்கத்தோடு இணைந்து சமூகம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கு சாதகமாக பங்களிக்கமுடியும் என்ற நம்பிக்கையோடு ஒருமித்திருக்கிறது

**விழிப்புணர்வு திட்டங்கள் :** மத நல்லிணக்க உரையாடல் , சமூக சேவை திட்டம் மற்றும் சமுதாய முயற்சிகள் போன்றவற்றை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு திட்டங்கள் மூலம் மனித சகோதரத்துவத்தை அங்கீகரிப்பதையும் ஊக்குவிப்பதையும் திருஅவை செயற்படுத்தி ஆமோதிக்கிறது. இத்தகைய ஈடுபாடுகள் தேவைப்படுபவர்களுக்கு ஆதரவளிக்கின்றன. மேலும் அவை பல்வேறு பின்னணியில் உள்ள மக்களிடையே பாலங்களாகவும் புரிதலை வளப்படுத்தவும் நோக்கமாக உள்ளன. இந்த விழிப்புணர்வு திட்டங்கள் முக்கியமாக அமைதியை மேம்படுத்துதல் , முரண் தீர்த்தல், நீதியை நிலை நாட்டுதல் , அனைவருக்கும் சமத்துவம் போன்றவற்றை ஊக்குவிக்கும் முயற்சிகளை ஆதரிக்கின்றன



**திருத்தந்தை அழைப்பு:** திருத்தந்தை பிரான்சிஸ் மனித சகோதரத்துவத்துக்கு குரல் கொடுப்பவர். அவர் தமது கடிதங்கள் மூலம் பல்வேறு நம்பிக்கை கொண்ட மக்களிடையே உள்ளடக்கம் , ஒற்றுமை மற்றும் சமாதானம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.தமது சுற்றுமடல் (அனைவரும் உடன்பிறந்தோர்) மூலம், திருத்தந்தை பிரான்சிஸ் நல்ல சமாரியன் உவமையை சுட்டிக்காட்டி , நாம் அயலானாக மாறவும் , மனித சகோதரத்துவத்தைப் புதுப்பித்து மேம்படுத்துவதற்கும் சவால் விடுக்கிறார்..

**ஒற்றுமையின் முக்கியதுவம்** : இந்த கருப்பொருளானது சமூக-பொருளாதார, கலாச்சார, மத மற்றும் இன வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், அனைத்து மக்களிடையே ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கோடிட்டு காட்டுகிறது

**பொது மனிதநேயம்** : சாரம்சத்தில், இந்த முக்கிய கருப்பொருளானது நமது வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல், ஒரு பொதுவான மனித நேயத்தைப் பகிர்ந்து பரஸ்பர மரியாதை , பரிவு மற்றும் ஒத்துழைப்பு மேலோங்கியிருக்கும் உலகத்தை வளர்க்க வழிவகுக்கும் மனித சகோதரத்துவத்தின் மீது கவனம் செலுத்துகிறது



பகிர்ந்துகொள்ளப்படும் **மனிதநேயம்** நாம் அனைவரும் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அங்கீகரித்து , இந்த கருப்பொருள் பல்வேறுவகைப்பட்ட பின்னணியில் இருக்கும் மக்களின் சிறந்த நல்லிணக்கம் , அமைதி மற்றும் கூட்டுழைப்பை சீர்தூக்கி பார்க்கிறது



“நம் அயலாராக  இருக்கும் அளவுக்கு நெருங்கியவர் யார் என்பதை தீர்மானிக்காமல் மாறாக நாமே அனைவருக்கும் அயலானாக மாற வேண்டும் என்று இயேசு அழைக்கிறார்.”

*திருத்தந்தை பிரான்சிஸ் - அனைவரும் உடன்பிறந்தோர் (80)*
*Fratelli Tutti (80)*